# இராணுவத்தால் தொடர்ந்து போரிட முடியாது

(பாரிஸ்)

சிறிலங்கா இராணுவத்தினர் பலவீனம் அடைந்திருப்பதால் புலிகளுடன் தொடர்ந்து அவர்களால் போரிட முடியாத நிலை ஏற்பட்டு வருவதாக விடுதலைப் புலிகள் பிரமுகர்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 31 இதழ் 155
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15 — 07 1992

## பதுக்கல் வியாபாரிகள் காவல்துறையிடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் வர்த்தகர்கள், அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

## 12 தமிழ் இளைஞர்கள் தாண்டிக்குளத்தில் கைது

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் காவலரணில் வைத்து நேற்று முன்தினம் தேசவிரோதிகளால் 12 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மேற்

4-ம் பக்கம் பார்க்க)

# ஒப்ரேஷன் பலவேகய மீண்டும் தொடர்வதற்கு ஏற்பாடு!

(கொழும்பு)

ஒப்ரேஷன் பலவேகய II இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக கூட்டுப்படைத் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இராணுவ நடவடிக்கைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் எப்போது ஆரம்பமாகும் என்பதனை தெரிவிக்கவில்லை.

அடுத்த இராணுவ நடவடிக்கை ஆனையிறவு மேற்குப் பகுதியில் இடம்பெறவுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை குறிப்பாக ஆனையிறவு மேற்கு கரையோரப் பகுதியில் இடம்பெறுமெனவும் இதன் பின்பே பலவேகய இரண்டு நடவடிக்கை முற்றுப் பெறுமெனவும் தெரிவித்தார். (சி)

## 1000 பேர் விடுதலை

(கொழும்பு)

தடுப்புக்காவலில் உள்ளவர்களில ஆயிரம் இளைஞர்கள், யுவதிகள் இம்மாத நடுப்பகுதியில் விடுதலை செய்யப்

[4ம் பக்கம் பார்க்க]

## ஐம்பது காவலரண்கள் படையினரால் அமைப்பு

(கொழும்பு)

வெற்றிலைக்கேணியிலிருந்து இராணுவம் முன்னேறியபகுதிகளில்சுமார் 50 காவலரண்கள் அமைக்கப்படவுள்ளதாகஇராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் காவலரண்கள் பலப்படுத்தப்பட்ட பின்னரே இயக்கச்சிப் பகுதியில் படை நடவடிக்கை இடம்பெறும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மீண்டும் இப்பகுதிகளை படையினர் கைவிடாது தக்கவைக்க படையினர் முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது. (சி)

## கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் ஊரடங்கு மக்கள் இடம்பெயர உத்தரவு

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் பரந்தன், தர்மபுரம் ஆகிய இடங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு உட்பட புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இன்று காலை 6 மணி தொடக்கம் மறுஅறிவித்தல்வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்குமென்று கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மேற்படி இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புக்காக தருமபுரம் மகாவித்தியாலயத்திற்கும், விசுவமடு பால்சேகரிப்பு நிலையத்திற்கும் செல்லுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

மக்கள் இடம்பெயர்ந்து செல்ல இன்று காலை 6 மணி

(4ம் பக்கம் பார்க்க)

## பத்து லட்சம் இலங்கையர் வெளிநாடுகளில் தஞ்சம்

[கொழும்பு]

வெளிநாடுகளில் சுமார் 10 லட்சம் இலங்கையர் வாழ்ந்து வருவதாகக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களப் புள்ளிவிபரம தெரிவித்துள்ளது.

கடந்த 12வருடங்களிலேயே பெருமளவு இலங்கையர் வெளிநாடுகளுக்குச் சென்றதாகவும் மேற்படி புள்ளி விபரம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகின் பல பாகங்களிலும் சுமார் 6 லட்சம் இலங்கைத் தமிழர் வாழ்ந்துவருவதும் குறிப்பிடத்தக்கது. [சி]

## யாழ். வாவியில் மக்கள் நடமாடத் தடையாம்

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த சாவகச்சேரி, கிளாலி, மேற்கு ஆனையிறவு, நாகதேவன்துறை, சங்குப்பிட்டி, கல்முனை ஆகிய இடங்களில் பொதுமக்கள் நடமாடுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேற்படி பகுதிகளில் நடமாடுபவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று கூட்டுப்படைத் தலைமையகத்தின் அறிக்கை மேலும் கூறுகின்றது.

யாழ். குடாக்கடலில் பயணம் மேற்கொள்ளும் பொது மக்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூட்டுப்படை தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது மா)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் ஏற்பட்டுள்ள இரத்தப்பற்றாக்குறையை நீக்கும் நோக்குடன் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் நேற்று முன்தினம் இரத்ததானம் செய்தனர்.

இம்மாணவர்களின் முன்மாதிரியானசெயலினை இரத்த வங்கி அதிகாரிகள் பாராட்டியுள்ளனர். (56

## மோசடி வர்த்தகர் கொழும்பில் தலைமறைவு

(கொழும்பு)

இளைஞர், யுவதிகளை ஏமாற்றி ஒரு கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்த இளம் வர்த்தகர் ஒருவர் கொழும்பில் தலைமறைவாகியுள்ளார்.

இவரை உடனடியாக கைதுசெய்யும்படி நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வர்த்தகர் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள குளிரூட்டப்பட்ட அறையொன்றில் இருந்து கொண்டு வேலைவாய்ப்புக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. குண்டு வீச்சு ஒன்பது தமிழர் படுகாயம்

(கொழும்பு)

நுவரெலியா சாமிமலை பகுதியில் ஜே வி. பி. என சந்தேகிக்கப்படுவோர் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் 9 மலையக தமிழர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. கொள்ளையடிக்கும் நோக்கில் இப்பகுதியில் நுழைந்த கோஷ்டி ஒன்று இந்த முயற்சி தோல்வியுற்றதையடுத்து கிரனைட் வீசியதாகவும் இதனால் 9 மலையகத் தமிழர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து இப்பகுதிக்கு விரைந்த படையினர் தேடுதலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இந்தியப் பிரதமருடன் பேச விடுதலைப் புலிகள் தயார் — அன்ரன் பாலசிங்கம்

(பாரிஸ்)

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவுடன் பேச புலிகள் தயாராயிருப்பதாக விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் பாரிஸிலிருந்து வெளிவரும் தமிழ்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: முன்னாள் பிரதமர் ராஜீவுக்கு இலங்கை இனப்பிரச்னையைப் புரிந்து கொள்ளும் பக்குவம் இருக்கவில்லை.

திரு. நரசிம்மராவ் ஏனைய இந்திய அரசியல்வாதிகளைவிட இலங்கை இனப்பிரச்னை பற்றி நன்கு புரிந்துகொண்டவர் என்பதால் அவருக்குத் தமது நிலைப்பாட்டை விளக்க தயாராயிருப்பதாகவும் திரு. பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (சி)

## வரி விளம்பரம்

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### "விண்ணில் அல்ல விடிவெள்ளி"

மீரா வெளியீடு தாமரைச் செல்வி எழுதியது "விண்ணில் மட்டுமா விடிவெள்ளி பூக்கும் மண்மீதும் பூக்கும் மானிட நேயத்தால்" சமூக நாவல் விற்பனையாகிறது (சி-6528)

### இடமாற்றம்

இதுவரை 15 வருட காலமாக யாழ். பஸ் நிலையம் முன்பாக இயங்கிவந்த டில்கா வாச் வேக்ஸ் எனும் ஸ்தாபனம் தற்சமயம் 284, ஸ்ரான்லி வீதியில் (வானவில் அருகாமை) இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். (சி-6533)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-6436)

### பாவித்த மணிக்கூடுகள்

பாவித்த தரமான மணிக்கூடுகள் வாங்கப்படும்—விற்கப்படும். பழைய மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் கடிகாரங்கள், றேடியோ, ரீ வி, டெக் ஆகியன உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம். (சி-6534)

### தரன் ஸ்ருடியோ

அவசரமாக, றபர் சீல்கள் பாஸ்போட், அடையாள அட்டைகள் மற்றும் கலர் படங்களுக்கும் விளம்பர போட் எழுதுவதற்கும். தரன் ஸ்ருடியோ, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6523)

### தவணைப் பரீட்சை

துரிதமீட்டலுக்கான வரலாறும் சமூகக் கல்வியும் "செயல்நூல்" ஆண்டு 7, வரலாறு ஆண்டு 9 வினா-விடை சமூகக்கல்வி, வரலாறு ஆண்டு10, வினா - விடை குறிப்புகள் விற்பனையாகின்றன. ஆக்கம்: நா. மயில்வாகனம், புத்தகசாலைகளில் பெறலாம். (சி-6536)

### தேவை

ஆஸ்பத்திரிவீதியில் ஆரம்பமாகவிருக்கும் வைத்திய நிலையத்துக்கு R. M. P. அல்லது A. M. P, M. L Tயும் தாதியும் தேவை. நா. தனபாலசிங்கம், 51, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-6540)

## வீடுகள் சேதம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு கடலில் படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டபோது வீடுகள் சேதமடைந்துள்ளது. (52)

# திரிசங்கு நிலையில் பலவேகய படையினர்

[கொழும்பு]

பலவேகய 2 இராணுவ நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட இடங்களை தொடர்ந்து தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாத திரிசங்குநிலை படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

புதிதாக இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள இடங்களுக்குள் புகுந்து புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த இடங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு பெருந்தொகையான படையினர் குறிக்கப்பட்ட இடங்களில் நிலை கொண்டிருக்க வேண்டும்.

தொடர்ச்சியாக பெருந்தொகையான படையினரை இப்பகுதியில் வைத்திருக்க முடியாத நிலை படையினருக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பழனியில் கலைஞர்போட்டி

[சென்னை]

பழனி நாடாளுமன்ற இடைத்தேர்தலில் தி. மு. க. தலைவர் மு கருணாநிதிபோட்டியிடவுள்ளதாக கூறப்படுகிறது.

# மேஜர் அசோகனுக்கு வடமராட்சியில் இறுதி அஞ்சலி

(பருத்தித்துறை)

தமிழீழ மீட்புப் போரிலே வீரச்சாவை தழுவிக்கொண்ட விடுதலைப்புலிகள் இயக்க சாள்ஸ்அன்ரனி சிறப்புப்படையின் சிறப்புத்தளபதி மேஜர் அசோகனின் புகழுடல் வடமராட்சிப் பகுதியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது பெருந்திரளான மக்கள் அணிதிரண்டு தமது இறுதி அஞ்சலிகளை செலுத்தினா.

நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் மேஜர் அசோகனின் புகழுடம்பு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

மேஜர் அசோகனின் புகழுடம்பு ஊர்வலமாககொண்டு செல்லப்பட்டவீதிகள் தோரணங்கள், வாழைமரங்களாலும், மஞ்சள் சிவப்பு வர்ணக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. (52)

## நன்கொடைப் பணம் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபைப் பகுதி சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைப்பணம் 1200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் 600 ரூபா வழங்கப்பட்டு வந்தது. (154)

## நாளை தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் சிதம்பரசுப்பிரமணிய சுவாமி கோவில் கதிர்காம உற்சவ தீர்த்தோற்சவம் நாளை வியாழக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது,

அன்றையதினம் காலை உரும்பராய் பருவதபர்த்தினி அம்பாள் ஆலய தொண்டர்சபையினர் உரும்பராய் ஞானவைரவர் ஆலயத்திலிருந்து காவடி எடுத்து நேர்த்திக்கடன் செய்யவுள்ளனர்.

## புத்தகக் கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி பிரதேசசபையின் உபபணிமனையான சரசாலை நூலகத்தின் புத்தகக் கண்காட்சி இம்மாதம் 18ம் திகதி முதல் 22ம் திகதி வரை நடைபெறும். ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட நூலக வாரத்தில் அப்பிரதேச பொதுமக்களிடம் சேகரிக்கப்பட்ட. சுமார் 2000 புத்தகங்களும் கண்காட்சிக்காகவைக்கப்படும். [56]

## இலவச திருமணப்பதிவு

(உடுவில்)

சுதுமலை கிழக்கில் திருமணப்பதிவு செய்துகொள்ளாத குடும்பங்களுக்கு சட்டபூர்வமான திருமணப்பதிவை இலவசமாக செய்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சுதுமலை கிழக்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சனசமூக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில் திருமணசான்றிதழ்களை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சி. ரகுலேந்திரன் வழங்கினார், வலி-தெற்கு சனசமூக நிலையங்களின் தலைவர் திரு. ச.சாம்பசிவம் ஆசியுரை வழங்கினார். திரு. ரவிநாதன் தலைமையில் விழா நடைபெற்றது.

## மேஜர் முரளி ஞாபகார்த்த தடகள போட்டி

[மானிப்பாய்]

மேஜர் முரளி ஞாபகார்த்த தடகள போட்டிகள் நவாலி கொத்தணியால் நவாலி அரசடி மகாவித்தியாலயத்தில் கடந்த 6ந் திகதி முதல் 8ந் திகதி வரை நடாத்தப்பட்டது. (71)

# அறிவித்தல்

வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசத்தின் செயலாளரும், தென்மராட்சி தெ. ப. பொ கூ. சங்கங்களின் கொத்தணித் தலைவரும், கொடிகாமம் தெ. ப. பொ. கூ. சங்கத்தின் தலைவருமான

**அமரர் திரு. மா. வேலுப்பிள்ளை**

அவர்களின்

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மேற்படி அஞ்சலி நிகழ்ச்சி 15-07-92 புதன்கிழமை நாவற்காடு வரணியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சகல தெ. ப. பொ. கூ. சங்கங்களையும் சார்ந்த அங்கத்தவர்கள், நிர்வாகிகள், பணியாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


அந்தியேட்டிக்கிரிகை — காலை 10.00 மணி

நினைவஞ்சலிக்கூட்டம் — பி. ப. 02-00 மணி

வடமாகாண
தெ. ப. பொ. கூ. ச. சமாசம்
499, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(எ-2293)

# ஓராண்டு நினைவஞ்சலி



**சுப்பிரமணியம் பத்மகிரிதரன்**

(கிரி)

தோற்றம்: 16-08-1971 மறைவு: 28-06-1991

திதி: 15-07-1992 (பிரதமை)

ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும், ஒளியாக எம் உள்ளத்தில் நிறைந்துள்ளாய் கிரி.

உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, அக்கா செல்வி,
ராசா அண்ணா (லொறி உரிமையாளர் H.K T)
ரவி அண்ணா (இத்தாலி), சிறி அண்ணா,
தம்பி முரளி.

(எ-2291)

# ஓராண்டு நினைவஞ்சலி



மணலாற்று மோதலில்
வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

## வீரவேங்கை பிறெமிளன்

(செபமாலை கமிலரதீஸ்ரன்)

வீர உதிப்பு: 10-06-1969 வீரச்சாவு: 15-07-1991

ஓராண்டு காலத்துள் ஓடி மறைந்திடினும்
உன் நினைவு இதயத்தின் ஒலியோடு நின்றொலிக்கும்
வீரா! நின் தியாகத்தால் வெற்றி கனிந்திருக்கும்
விடிவுக்கு முன்னோடி முடிவுக்கு முதலானாய்!

தாய், சகோதரர், மாமா.
பெரியம்மா குடும்பத்தினர்.

7/1, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
15-07-1992.

(சி-6538)

யாழ்ப்பாணம்



# இந்திய மத்திய அரசாங்கத்தின் சூழ்ச்சியினால் இலங்கைத் தமிழ் அகதிகள் அவலநிலையில்

(சென்னை)

இந்தியாவில் தஞ்சம் புகுந்திருக்கும் மூன்றுலட்சம் இலங்கை அகதிகளை வலுக்கட்டாயமாக இலங்கைக்கு அனுப்பி வைக்கும் சூழ்ச்சியில் இந்திய மத்திய அரசு ஈடுபட்டிருப்பதாக 'நக்கீரன்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

மேலும் தெரிவிக்கையில் நிதியமைச்சர் மன்மோகன் சிங் அண்மையில் தயாரித்த வரவு செலவுத் திட்டத்தை அனைத்துநாட்டு நிதியகம், உலகவங்கி ஆலோசனையின் பேரில்தான் தயாரித்துள்ளார். ஆலோசனை சொன்னவர்களோ விவசாயிகளுக்கு கொடுக்க கூடிய மானியத்தை கூட நிறுத்து வளர்ச்சித்திட்டங்களுக்கு செலவிடாதே. நல்வாழ்வுத்திட்டங்களுக்கு ஊக்கமளிக்காதே போன்ற மறைமுக நிர்ப்பந்தங்கள் காரணமாக ''அகதிகள் நல்வாழ்விற்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. இதனால் தமிழகத்திலுள்ள மூன்றரைலட்சம் இலங்கை அகதிகளின் நிலமை கேள்விக்குறியானது. இந்த கேள்விக்கான விடையையும் சொல்லி அதை நிறைவேற்றும் பொறுப்பை இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இந்திய உளவுத்துறை (ரோ) யிடம் ஒப்படைத்துள்ளார்.

இதன்காரணத்தால் இந்தியாவில் தஞ்சம் புகுந்திருக்கும் அகதிகளில் முகாம்களில் தங்கியிருக்கும் ஒன்றரை லட்சம் அகதிகளையும் வெளியில் தங்கியிருக்கும் ஒன்றரை லட்சம் அகதிகளையும், எப்பாடுபட்டாவது இலங்கைக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் இந்திய புலனாய்வுத்துறை ஈடுபட்டுள்ளது.

இம்முயற்சியில் முழுமுச்சோடு ஈடுபட்டிருக்கும் இந்திய உளவுத்துறைக் தமிழகத்தை வன்முறை களமாக்க திட்டங்கள் தீட்டிவருகின்றது இதன்மூலம் இலங்கை அகதிகளை வலுக்கட்டாயமாக ''புலிகளின் ஆதரவாளர்'', என்ற போர்வையில் இலங்கைக்கு அனுப்பிவைக்க மூன்றுமாதகாலத்துக்குகப்பல்களை வாடகைக்கு எடுத்துள்ளது.

ஜெயலலிதாவிற்கு கொலை மிரட்டல் கடிதங்கள் புலிகளின் கடித உறை போன்ற கடித உறைகளிலே இந்தியஉளவுத்துறை அனுப்பி வருகின்றது. விடுதலைப்புலிகள் இயக்கத்தைக் சேர்ந்த நூறு தற்கொலைப்படையினர் தமிழகம் வந்து தங்கியிருப்பதாக ''வயர்லெஸ்'' ஸை ஒற்றுக்கேட்டதாகவும் செய்திகளை அவர்கள் வெளியிட்டு வருகின்றனர். இதன்காரணத்தால் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பாதுகாப்பு வழங்கும்கறுப்புபூனைப்படைகள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஜெயலலிதா கோட்டைக்கு கிளம்புவதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பாக வழியெங்கும் உள்ள குழிகள் குப்பைத்தொட்டிகள் போன்றவற்றைக் கூட விடாமல் ஆராயும் இவர்களது நிலை பரிதாபகரமானது. வெடிகுண்டுகளை அகற்றுவது, செயலிழக்கச்செய்வது போன்ற பயிற்சிகளுக்காக மாநிலத்தில் பதினைந்துபேருக்கு முதலமைச்சர் பயிற்சி வழங்க முடிவு செய்துள்ளார்.

இதுவரை இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அகதிகளின் நலன்களைக் கவனிக்கும் அதிகாரி சொன்ன வார்த்தைகள் சோகமானது. ''உங்களை என்னுடைய மனச்சாட்சிக்கு எதிராகத்தான் புன்னகையோடு அழைத்துச் செல்கிறேன். இருந்தும் மனம் வலிக்கிறது இங்கு ஏன் வந்தீர்கள்'' என வாய்விட்டுக்கூறினாராம்.

இப்படி இலங்கைப் பிரச்சனையில் முழுமுச்சோடு இறங்கியிருக்கும் உளவுத்துறையினர் தங்களின் செய்கைகளினால் எதைச் சாதிக்கப்பார்க்கிறார்கள். அவர்களின் இறுதி லட்சியம் என்னவென்று பார்த்தால் அது மிகவும் அபாயகரமாகவுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு தமிழகத்தில் ஆதாரமுமில்லாமல் செய்வது; தமிழின அமைப்புக்காகப் போராடும் அமைப்புக்களை வேலைசெய்யவிடாமல் அறிவிக்காத தடையை ஏற்படுத்துவது. விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஜெயலலிதாவை முன்நிறுத்தி புலிகளை எதிராக வெறுப்பூட்டுவது, இதன்மூலம் புலிகள் தங்களின் எதிரி ஜெயலலிதாதான் என்கிற சூழ்நிலையை உருவாக்கி இறுதியில் ஜெயலலிதாவிற்கு ஆபத்தை உண்டுபண்ணுவது.

நடக்குமா? என்று தோன்றும் இதுபோன்ற விஷயங்களைத்தான் இந்திய புலனாய்வுத்துறை இந்திய மண்ணில் நிறையவே நடாத்தியுள்ளது. இத்திட்டத்தை இந்திய புலனாய்வுத்துறை எக்காரணம் கொண்டும் தோல்வியடைய விடக்கூடாதென மூத்த அதிகாரிகள் மும்முரமாகவுள்ளனர். இருந்தாலும் பல விபரம் தெரிந்த அதிகாரிகள் விடுதலைப்புலிகள் இல்லாமல் ஈழத்தமிழர் பிரச்சனையை தீர்க்கமுடியாது. புலிகளைக் கைதுசெய்யச்சொல்கிறது தவறானது என குரல் எழுப்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள். (எஸ்)

## தமிழக சஞ்சிகை தகவல்

---

## மருத்துவ வசதியின்றி தமிழர் புறக்கணிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றிலுள்ள தமிழருக்கு மருத்துவ வசதிகள் புறக்கணிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அக்கரைப்பற்றில் ஆஸ்பத்திரி ஒன்று இயங்கிவருகின்ற போதும் ஆஸ்பத்திரிக்கு தேவையான மருத்துவ வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.

இதனால் நோய்களினால் பாதிப்படையும் தமிழர்கள் இங்கு சிகிச்சை பெறமுடியாத நிலையிலுள்ளனர்.

போதிய சிகிச்சை வசதிகள் இன்றி இப்பகுதியில் பலர் இறந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

---

## இளவரசி டயானாவின் செல்வாக்கு அதிகரிப்பு!

(லண்டன்)

பிரிட்டிஷ் அரசுகுடும்பத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவராக இளவரசி டயானா விளங்குவதாக லண்டனில் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்து கணிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.

மேலும் சாள்ஸ்–டயானா தம்பதிகளின் 11வருட கால திருமண வாழ்வில் விரிசல் ஏற்பட்டுள்ளமைக்கு இளவரசர் சார்ள்ஸ்ஸே பொறுப்பு என பெரும்பாலோர் தெரிவித்திருப்பதாக லண்டனில் வெளியாகும் 'டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (க)

---

### விநியோகம்

(கொக்குவில்)

நல்லூர் பல. நோ. கூ. சங்கம் பாடசாலை மாணவர்களுக்கான மார்ச் மாத சத்துணவு முத்திரைக்கு கொத்தமல்லி வழங்கி வருகின்றது. (135)

---

## இன்று

[யாழ்ப்பாணம்)

யாழ். ஈச்சமோட்டை கலட்டிபுலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய 'திருமஞ்சம்' வெள்ளோட்டம் இன்று நண்பகல் 1மணிக்கு நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து சமய உரைகளும் இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகளாக சிறப்புமலர் வெளியீடு, மேளக் கச்சேரி, வில்லுப்பாட்டு, திரு இ. ஜெயராஜ் தலைமையில் கம்பன் கழகத்தினர் வழங்கும் பட்டிமன்றமும் இடம்பெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய ஸ்ரீ பழனிவேல் பவனி இன்று பிற்பகல் 2-30 மணிக்கு இடம்பெறும். பழனிவேல் பவனியின் போது கோலாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், குதிரையாட்டம். உடுக்கு வாத்தியம் என்பனவும் இடம்பெறும்.

பழனிவேல் பவனிக்கு முன் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளது.

0 0

(பருத்தித்துறை)

பருத்தித்துறை குருமணல் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழா இன்று 15ம் திகதி புதன்கிழமை நடைபெறுகின்றது. [52]

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். டல்கலைக்கழக அணிக்கும் இளவாலை யங் ஹென்றீஸ் அணிக்குமிடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக அணிக்கும் குருநகர் பாடும்மீன் அணிக்குமிடையில் இன்று நடைபெற இருந்த போட்டி 22ம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

---

### கட்டுப்பாட்டு விலையில்

## ஆசிரியர்களுக்கு 2 லீற்றர் மண்ணெண்ணை

(உடுவில்)

பாடசாலைகள் மூலம் ஆசிரியர்களுக்கு மண்ணெண்ணை வழங்கப்பட்டு வருகின்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்களுக்கு தலா இரண்டு லீற்றர் வீதம் மண்ணெண்ணை அண்மையில் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கப்பட்டது. மானிப்பாய் மகளிர் கல்லூரி. மெமோரியல் மகாவித்தியாலயம், சோதிவேம்படி வித்தியாசாலை போன்ற பாடசாலை ஆசிரியர்களுக்கும் மண்ணெண்ணை வழங்கப்பட்டது. (109)

ஃ ஃ

(அரியாலை)

ஆனைக்கோட்டை உயரப்புலம் கத்தோலிக்க பாடசாலையில் ஆசிரியர்களுக்கு நேற்றுமுன்தினம் மண்ணெண்ணை கட்டுப்பாட்டுவிலையில் விநியோகிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணை ஏனைய பாடசாலைகளிலும் விநியோகம் செய்யப்பட்டதாகத் தெரிய வருகின்றது. (59]

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

அண்மையில் குமண கப்பலில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்ட மண்ணெண்ணை யாழ். வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு ஊழியருக்கு 15 ரூபா வீதம் ஐந்து லீற்றர் மண்ணெண்ணை வழங்கப்படுகிறது.

பிற இடங்களிலிருந்து வந்து கடமை புரியும் ஊழியர்களுக்கு 2 லீற்றர் வழங்கப்படுகிறது. (56)

---

## மக்கள் இடம்பெயர்வு

(பளை)

மாசார் இயக்கச்சி மக்கள் அண்மையில் நடந்த இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து கொடிகாமம், வரணி போன்ற இடங்களில் உறவினர் வீட்டிலும் தேவாலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

---

## மாதாந்த உதவிப்பணம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் இருந்து காசநோய்களினால் பீடிக்கப்பட்டு மாதாந்தம் உதவிப்பணம் பெற்று வந்தவர்களுக்கு மார்ச் ஏப்ரல் மாதங்களுக்குரிய உதவிப் பணம் விநியோகிக்கப்படுகின்றது. (137)

---

## வளர்ந்தோர் கல்விக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட கல்வித் திணைக்கள வளர்ந்தோர் கல்விப் பகுதியின் 1992ம்ஆண்டுக்கான தொழிற்திறன் பயிற்சிகள் ஆகஸ்ட் மாதம் 3ம்திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன,

உடையமைத்தல், ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு, வீட்டு மின்னிணைப்பு, ஹோட்டல் வியாபாரம். தமிழ்ச் சுருக்கெழுத்து தட்டச்சு, வானொலி திருத்துதல், விவசாய விஞ்ஞானம், பத்திரிகையாளர் பயிற்சி கைப்பணிப்பயிற்சி, குளிரூட்டி திருத்துதல் மரத்தளபாட உற்பத்தி ஆகிய பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 20ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பு சம்பந்தப்பட்ட பயிற்சி நடைபெறும் பாடசாலை அதிபர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றும் மேலதிக விபரங்கள் யாழ். கல்வித் திணைக்கள வளர்ந்தோர் கல்வி அதிகாரியிடம் அறிந்துகொள்ளலாம் எனவும்தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர்களின் கூட்டமும் நாளை 16ம் திகதி வியாழக்கிழமை காலை 10மணியளவில் யாழ். கல்வித்திணைக்களத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [சு)

---

## இராசி பலன்

**15-07-1992**

**புதன்கிழமை**

**(தமிழுக்கு ஆனி 31)**

பிரதமை பி. இ. 2–29 வரை: உத்தராடம் மு. இ. 11-15 வரை. அமிர்தசித்தம இராகு காலம் பகல் 12-00 முதல் 1–40 வரை: சபநேரம் மாலை 4–30 முதல் 6–00 வரை.

மேடம்: தொழில் சிறப்பு, இலக்கிய சிந்தனை. பணவரவு.

இடபம்: மறைமுகதொல்லை கடும் சினம், தயக்கம்.

மிதுனம்: குடும்ப வேற்றுமை, தகாத செயல், வீண் பழி.

கடகம்: வாக்கு வன்மை, குடும்ப மகிழ்ச்சி, விருந்து.

சிங்கம்: பங்காளர் உதவி, காரிய சித்தி, புதிய நட்பு.

கன்னி: மனக் குரோதம், அனுவசிய தலையீடு, பயம்.

துலாம்: வேலைப்பளு, மாமியார் துன்பம், சோம்பல்.

விருச்சிகம்: நண்பர் உதவி. ரோக நிவர்த்தி, உல்லாசப் பயணம்.

தனுசு: குடும்பக் கஷ்டம், தொழில் பாதிப்பு, மருத்துவச் செலவு.

மகரம்: உறவினர் வருகை, தைரிய மிகுதி. நல்ல முடிவு.

கும்பம்: மரியாதைக்குப்பங்கம், மனவெறுப்பு. புத்திரர் செலவு.

மீனம்: எதிர்பாராத உதவி, சுபகாரியம், தெய்வீக சிந்தனை.

— ஜோஸ்யர்

---

## நாடகப்போட்டி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கலையரசு கலைக்கழக நாடக பயிற்சி கல்லூரி சார்பில் நடைபெறும் பாடசாலை மாணவர்களுக்கான நாடகப்போட்டிகள் 18ம்திகதி சனிக்கிழமை பாடசாலை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பதால் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

# ★ இனவெறி அரசிடமிருந்து தமிழரை புலிகள் காப்பதால் அவர்களை ஆதரிக்கிறோம்"

## பண்டுருட்டி இராமச்சந்திரன் பேட்டி

(சென்னை)

"நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருவது இந்தியாவில் அல்ல. இலங்கையில்தான் இலங்கை இனவெறி அரசிடமிருந்து விடுதலைப் புலிகள் தமிழர்களைக் காப்பாற்றுகின்றார்கள் என்பதால் அவர்களை ஆதரிக்கின்றோம்."

இவ்வாறு தமிழக பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் பண்டுருட்டி இராமச்சந்திரன், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருகிறீர்கள் எந்த அடிப்படையில் ஆதரவு தருகிறீர்கள் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் இச்கருத்தைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தகவல் தருகையில் "இலங்கையில் நடப்பதுபற்றி இங்கு பேசக்கூடாது பேசினுல் மாமியார் வீடு தான் என்ருல் அம்மாமி ஆட்சியில் இருப்பதை விட அந்தமாமியார் வீடேமேல் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் ராஜீவ் காந்தி கொலைக்கும் சம்பந்தம் இருப்பதாக இந்திய அரசு குற்றம் சாட்டுகிறது. புலிகள் குற்றவாளியா? இல்லையா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும் அரசே தீர்மானிப்பது நீதிமன்றத்தை மதிக்காத சர்வாதிகாரசெயலாகும் என்ருர். [எஸ்)

### மேஜர் முரளி விளையாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டு விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக இன்று புதன் கிழமை காலை 6-00 மணிக்கு ஆண்கள் சயிக்கிள் ஒட்டமும், 6-10 மணிக்குப் பெண்கள் சயிக்கிள் ஓட்டமும் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகள் உரும்பிராயில் உள்ள மேஜர் முரளியின் நினைவுத் தூபிக்கு முன்ஞல் ஆரம்பித்து, பலாலி வீதி ஊடாக ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி வழியாகச் சென்று யாழ். செயலகத்தில் முற்றுப் பெறும்.

ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டம், யாழ் செயலகம் முன்ஞல் ஆரம்பித்து, புங்சங்குளம் சந்தி, கொழும்புத்துறைச் சந்தி, பிரதான வீதி, கோயில் வீதி வழியாகச் சென்று திலீபன் நினைவுத் தூபிக்கு முன்ஞல் முற்றுப் பெறும், தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரியில் 8-30 மணிக்குக் கயிறிழுத்தல், மெய்வலுநர் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

### உலக சைவப்பேரவை

(கொழும்புத்துறை)

இந்து சமயத்தின் மகத்துவம், கலாச்சாரங்களைப் பேணிப்பாதுகாக்கும் நல் நோக்குடன் உலக சைவப் பேரவை என்ற அமைப்பு சென்னை சைவசித்தாந்த பெருமன்ற மண்டபத்தில் நடாத்த சைவப் பேராளர் கூட்டத்தில் அமைக்கப்பட்டது. (154)

### நிவாரண குழு

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அனர்த்தங்கள் ஏற்படும்போது நிவாரணம் வழங்குவதற்கும், சேதங்களை மதிப்பிடுவதற்கும் இடம் பெயர்ந்த மக்களின் நலன்களை கவனிப்பதற்கும் பிரிவு மட்டக்குழு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது, (137)

### 1000 பேர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளார்கள்.

இவர்களில் நேற்று நூறு பேர் விடுதலை செய்யப்பட்டதகாத் தெரிவிக்கப்படுகிறது.

### 12 தமிழ்

1ம் பக்கத் தொடர்ச்சி)

படி தமிழ் இளைஞர்கள் அவ்விடத்திலேயே கண்மூடித்தனமாக தாக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் இளம் பெண்கள் டலரும் துன்புறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது, (க)

### பதுக்கல்

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

வைத்திருந்த வர்த்தகர்கள் தமிழீழக் காவல்துறையினரிடம் சிக்கிக்கொண்டனர்.

உரும்பராய், கந்தர்மடம், யாழ். நகர், கட்டைப்பிராய், கல்வியங்காடு, நல்லூர். நாயன்மார்கட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்களே நேற்றுப் பெருமள்வில் சிக்கிக் கொண்டனர்.

காவல்துறையினரின் மேற்படி கைது நடவடிக்கையை தொடர்ந்து திருநெல்வேலி, யாழ்நகர் ஆகிய இடங்களில் தேங்காய் எண்ணெய், சவர்க்காரம் ஆகிய பொருட்களின் விற்பனை நேற்று அதிகரித்திருந்ததை காணக்கூடியதாக விருந்தது.

சவர்க்காரம், தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களைப்பதுக்குவதிலும் கூடிய விலைக்கு விற்பதிலுமே வர்த்தகர்கள் பெரிதும் ஈடுபட்டுவருகிருர்கள்.

மேற்படி பொருட்களை பதுக்கும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ காவல் துறை அறிவித்தல் விடுத்தது தெரிந்ததே. (க-வி)

### பள்ளி அதிபர் ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

பளைக் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களை இன்று புதன்கிழமை 10-00 மணிக்கு கிளி/வேம்போடு சி. சி. த. க. பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு கொத்தணி அதிபர் கேட்டுள்ளார்.

### கிளிநொச்சி, முல்லைத்தீவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொடக்கம் நாளை 16ந் திகதி காலை 6 மணிவரைக்கும் அனுமதிக்கப்படுவார்கள். பரந்தன் முல்லைத்திவு வீதியில் இருந்து இருபக்கமும் 1000 மீற்றர்களுக்கு அப்பால் இருக்கும்படி கேட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (மா)

## உலக நாடுகளிடம் இலங்கை கடனாளி

(கொழும்பு)

உலக நாடுகளிடம் இலங்கை தொடர்ந்தும் கடனாளியாக இருப்பது குறித்து ஜனாதிபதி பிரேமதாசா கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கை உலக நாடுகளிடம் தொடர்ந்தும் கடன்பட முடியாது. கடனாளிகள் என்ற நிலையிலிருந்து எம்மை நாம் மீட்டெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து பெருமளவு கடனைப் பெற்று வருவதையே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார். [சி]

## வடக்கு - கிழக்கு இணைப்பை தொண்டாவலியுறுத்தலாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பை அமைச்சர் தொண்டமான் வற்புறுத்தி வருவதில் தவறு ஏதும் இல்லையென அமைச்சர் திரு. வீரசிங்கமல்லிமாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: தொண்டமான் ஒரு தமிழர். தான் சார்ந்துள்ள சமூகத்திற்காக அவர் குரல் எழுப்புவதைத் தவறென்று கூறமுடியாது. வடக்கு-கிழக்கு இணைப்பிற்காக அவர் குரல் கொடுக்கலாம். நானும் அவரது ஸ்தானத்தில் இருந்தால் அப்படித் தான் செய்வேன் என்றும் அமைச்சர் மல்லிமாராய்ச்சி கூறியுள்ளார்.

வடக்கு-கிழக்கு இணைப்பை திரு. தொண்டமான் வலியுறுத்தி வருவதற்கு கண்டனங்கள் எழுந்ததற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மல்லிமாராய்ச்சி இதனைக் கூறினர். [சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8

## மன்னர் பூநகரி பகுதியில் தமிழ் மக்கள் பாதிப்பு

[மன்னர்]

மன்னர் -பூநகரிப் பகுதியில் வசிக்கும் தமிழ் மக்கள் கடும் நோய்களுக்கு உள்ளாகி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை கரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் இப்பகுதிகளைவிட்டு வெளியேறியது மட்டுமன்றி இப்பகுதியில் உள்ள வைத்தியசாலைகள், கூட்டுறவுகடைகள், வீடுகள் பல இராணுவ நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

மேலும் வைத்திய வசதிகள் எதுவுமின்றி இப்பகுதி மக்கள் தொடர்ந்து துன்புற்று வருவதாகவும் போராளிகளின் முகாம்களுக்கு சென்றே இவர்கள்சிகிச்சைகளை பெற்றுவருவதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

### போக்குவரத்து கண்காணிப்பு

(அரியாலை)

யாழ். நகரச் சந்திகளிலும் பாடசாலைப் பகுதிகளிலும் போக்குவரத்துக் காண்காணிப்பு வீதி ஒழுங்குகளை நடமாடும் காவல்துறையினர் கவனித்துவருகின்றனர்.

சைக்கிள்களில் கூட்டாகச் செல்வோர் உடன் தடுத்து நிறுத்தப்பட்டு இவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. [59]

### மோசடி

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

உதவி செய்வதாகக் கூறி 200க்கு மேற்பட்ட இளைஞர்களையும் யுவதிகளையும் ஏமாற்றிப் பணம் பறித்துள்ளார்.

இளைஞர்களுக்கு ஸ்கூட்டர், ஓட்டோ, டாக்ஸி என்பனவற்றை வாங்குவதற்கு உதவி செய்வதாகவும், அதற்கு முன்னர் வைப்புப் பணமாக 20 ஆயிரம் ரூபாவை அறவிட்டுள்ளதுடன், யுவதிகளுக்கும் நவீன தையல் மெஷின்கள் வாங்கித்தருவதாகவும் அவர், அவர்களிடமும் வைப்புப் பணமாக ஒரு தொகையை அறவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, பாடசாலை மாணவர், ஆசிரியர், பெற்ருேர் ஆகியோரிடமும் பாடசாலை உபகரணங்கள், பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் வாங்குவதற்கும் உதவி செய்வதாகக்கூறி பெருந் தொகையான பணத்தை அறவிட்டதாகவும் பொலிஸ் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது. (வி)

### இராணுவத்தால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. லோறன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. யின் தெற்காசிய ஒலிபரப்பிற்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

விடுதலைப் புலிகள் அண்மையில் நடத்திவரும் தாக்குதல்களில் ஒரே நேரத்தில் பெருமளவு படையினர் உயிரிழந்ததும், ஆயுதங்களை கைவிட்டு படையினர் தப்பியோடுவதும் சிறிலங்கா இராணுவத்தினருடைய பலவீனத்தையே காட்டுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திரு. திலகர் இப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது: புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் இராணுவத்தினர் திண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், வடபகுதியில் தொடர்ந்தும் இராணுவத் தாக்குதல்களுக்கான ஏற்பாடுகளை அரசு செய்துவருவது, தமது படைகளையே மேலும் பின்னடையச் செய்யும் நடவடிக்கையாகும்.

அண்மைக் காலமாக இடம் பெற்றுவரும் தாக்குதல்கள் படையினருக்குப் பெரும் பின்னடைவையே ஏற்படுத்தியுள்ளது.

### இடம் பெயர்ந்தோர் கடிதங்கள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் இளவாலை, மாரீசன் கூடல் உப தபால்நிலையங்களின் பகுதிகளிலுள்ள மக்கள் தங்கள் கடிதங்களைப் பண்டத்தரிப்பு தபாலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. [72

### விளையாட்டுப் போட்டி

[புங்குடுதீவு]

நாவற்குழி 'லவனிதா' குடியேற்றத் திட்டத்தில் அமைந்துள்ள ஊர்காவற்றுறைக் கொத்தணியைச் சேர்ந்த, தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. [101]

### மருந்து தட்டுப்பாடு

[கொழும்புத்துறை]

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்பாலான அரசினர் வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள் ஆகியவற்றில் சில அத்தியாவசிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (154)

### அகதிகளுக்கு 3000 கிலோ அரிசி அன்பளிப்பு

(உடுப்பிட்டி)

வியாபாரி மூலை விநாயகர் தரும நிதியம் வலிகாமம் கிழக்கு பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் அகதியாகி இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கவென அறுபத்தாறுயிரம் ரூபா பெறுமதியான மூவாயிரம் கிலோ அரிசியை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் வழங்கியுள்ளது. [150]

### சர்வோதய பிரதேச நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சர்வோதயம் தனது பிரதேச நிலையம் ஒன்றை கடந்த வியாழக்கிழமை நல்லூர்கோட்டத்தில் சட்டநாதர் வீதியில் திறந்து வைத்து யாழ் மாவட்ட இணைப்பாளர் திரு பா.செல்வரத்தினம் மங்களவிளக்கேற்றி சர்வோதயக்கிளையை திறந்து வைத்தார்,

### நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்]

மாவீரர் லெப்டினன்ட் சீலன் (லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி, திருமலை) ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டம் இன்று 15-ம் திகதி இரவு 7-30 மணியளவில் மீசாலை அல்லாரை தெற்கில் அமைக்கப்பட்டுள்ள சீலன் நினைவுத் தூபிக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.